IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
1
DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | ரஞ்சித் |
| FATHER'S NAME | - | நடராஜன் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.03.2024.

All Accsued Present

நான் தற்போது காட்டுபுத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 2021 ஆம் ஆண்டில் வட வேலூர் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்த போது 11.01.2021 அன்று காலை 7.30 மணியளவில் கிராம உதவியாளர் ஜீவரத்தினம் மற்றும் ஆனந்தன் ஆகிய இருவரும் ரோந்து பணியில் வட வேலூர் கிராம எல்லைகுட்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட போது வேலூர் மாநகராட்சி ஊழியர் கௌதமன் என்பவர் தகவல் அளித்தன் பேரில் வேலூர் சுடுகாடு எரிமேடைக்கு பின்புறம் கால் மட்டும் வெளியே தெரிந்த நிலையில் ஒரு சடலம் புதைக்கப்பட்டுள்ளது என்று தகவலை கிராம உதவியாளர்களிடம் சொன்னார். அந்த தகவலை கிராம உதவியாளர் என்னிடம் சொன்னார்கள். அந்த தகவலை கேட்டதும் வேலூர் வடக்கு காவல் நிலையத்திற்கு ஒரு புகார் அளித்தேன்.நான் கொடுத்த அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். அந்த புகாரில் வேலூர் சுடுகாடு எரிமேடைக்கு ஒரு சடலம் கால் மட்டும் வெளியே தெரியும் படி

புதைக்கப்பட்டுள்ளது என்று கூறினேன். வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்தேன். அதன் பிறகு வட்டாட்சியர் மற்றும் காவல் ஆய்வாளர் சடலம் இருந்த இடத்திற்கு வந்தார்கள். நான் அங்கு இருந்தேன். அங்கு சென்ற பிறகு மாநகராட்சி ஊழியர்களை வைத்து சடலத்தை வெளியே தோண்டி எடுத்தனர். அதன் பிறகு சடலம் மிகவும் அழிகிய நிலையில் இருந்ததால் அங்கேயே சடல கூராய்வு வேலூர் அடுக்கப்பாறை அரசு மருத்துவமனை மருத்துவர்கள் வரவைக்கப்பட்டு அங்கேயே செய்யப்பட்டது. அதன் பிறகு சடலத்தை கூராய்வு செய்ததன் பின்னர் அங்கிருந்த இறந்த நபரின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் தோண்டி வெளியே எடுக்கும் போது பிரேத விசாரணை வட்டாட்சியர் மேற்கொண்டார். நான் கொடுத்த புகார் சம்மந்தமாக வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன்பிறகு 18.01.2021 அன்று காலை சுமார் 9 மணியளவில் அலுவலக பணியில் ஈடு பட்டு இருந்த போது வேலூர் கீரின் சர்க்கிள் நறுவி மருத்துவமனை அருகில் சென்று கொண்டு இருந்த போது வடக்கு காவல் நிலையத்தில் இருந்த தகவல் அளித்தார்கள் நறுவி மருத்துவமனைக்கு அருகில் கார் டெக்கர்ஸ் என்ற இடத்திற்கு வரும் படியும் 11.01.2021 அன்று நடந்த தோண்டி எடுக்கப்பட்ட சடலம் தொடர்பான வழக்கிற்கு தொடர்புடைய நபர் உள்ளார் என்று தகவல் சொன்னார். நானும் எனது உதவியாளர் ஜீவரத்தினமும் அங்கு சென்றோம் அதன் பிறகு பரசுராமன் என்பவரிடம் வாக்குமுலம் என் முன்னிலையிலும் என் உதவியாளர் முன்னிலையிலும் ஒரு வாக்குமுலம் வாங்கினார்கள். அதன் பிறகு மறைத்து வைத்திருந்த தென்றல் நகர் குப்பை மேட்டு பகுதியின் இரு சக்கர வாகனத்தை அடையாளம் காட்டினார். அதன் பிறகு அந்த இரு சக்கர வாகனத்தை காவல் ஆய்வாளர் கைப்பற்றி என்னிடம் மகஜரிலும் பரசுராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் என்னிடம் என் உதவியாளரிடமும் கையொப்பம் பெற்றார்கள். பரசுராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தில் முதலாவது உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையெப்பம் அ.சா.ஆ.2 ஆகும். இரண்டாவது உள்ள கையொப்பம் என்னுடைய உதவியாளருடையது. கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையெப்பம் அ.சா.ஆ.3 ஆகும்.

இரண்டாவது உள்ள கையொப்பம் என்னுடைய உதவியாளருடையது. காவல் கைபற்றிய இரு சக்கர வாகனம் சா.பொ.1 ஆகும். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொடுத்த புகாரை 3 நகல்களாக எடுத்து ஒரு நகலை காவல் நிலையத்திலும், ஒரு நகலை என்னுடைய உயர் அதிகாரிக்கும் கொடுத்து விட்டு மீதம் உள்ள நகலை என்னுடைய அலுவலகத்தில் வைத்துள்ளேனா என்றால் இல்லை. திசைகள் எட்டு என்றால் சரிதான். இறந்து போன வேலு என்பவரின் தலை எந்த திசையில் இருந்தது என்றால் தலை கிழக்கு பக்கமும், கால் மேற்கு பக்கமும் இருந்தது. தோண்டி எடுக்கப்பட்ட சடலம் வேறு எந்த இடத்திலாவது போடப்பட்டதா என்றால் பக்கத்திலேயே எடுத்து போடப்பட்டது. எந்த திசையில் எடுத்து போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. சடலத்தை கொடுத்ததும் உடலலை எடுத்து சென்றார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சடலத்தை எடுத்து செல்வதற்கு வாகனத்தை நான் ஏற்பாடு செய்தோமா என்றால் வருவாய் துறை மூலம் எதுவும் ஏற்பாடு செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும் போது சம்பவ இடத்தை சென்று பார்த்து விட்டு என்னுடைய உயர் அதிகாரிகள் உத்தரவு படி இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் படி வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் இடத்தில் மேற்கில் ஒரு பாலம் வேலூாரில் இருந்து காட்பாடிக்கு செல்கிறது என்றால் சரிதான். கிழக்கில் உள்ள பாலம் காட்பாடி இருந்து வேலுருக்கு வரும் பாலம் என்றால் சரிதான். கிழக்கு புறத்தில் இருக்கும் மனிதர்கள் மேற்கு பக்கமாகமாவும், மேற்கு பக்கத்தில் இருக்கும் மனிதர்கள் கிழக்கு பக்கமாகவும் இரு சக்கர வாகனத்தில் நடந்தும் சம்பவ இடத்தின் தெற்கு பக்கம் 25 அடி துாரத்தில் மக்கள் செல்வார்கள் என்றால் எப்போதாவது தான் செல்வார்கள் மற்றும் அது பொது பயன்பாட்டிற்கான வழியல்ல.சடலத்தை தோண்டி எடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் கிராம உதவியாளர்கள் மற்றும் காவல் துறையினர்கள் மற்றும் வேலூர் மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் நான்

ஆகியோர்கள் இருந்தோம். பொது மக்கள் எவ்வளவு பேர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 20 முதல் 25 பேர்கள் இருந்தார்கள். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் காலை 11 மணி இருக்கும். சடலத்தை யார் தோண்டி எடுத்தார்கள் என்றால் வேலூர் மாநகரட்சி ஊழியர்கள் சாட்சி தானாக முன் வந்து அவர்கள் மாநகராட்சி ஊழியர்கள் தானா என்று சொல்கிறார். அங்கு போலீசார் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் மொத்தம் சேர்த்து 10லிருந்து 15 நபர்கள் இருந்தார்கள். சடலத்தை தோண்டி எடுத்த நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் போலிசார் எந்த செயல்களும் செய்யவில்லை என்றால் இல்லை, தோண்டி எடுப்பதற்கான உதவிகள் செய்தார்கள். சடலத்தை எத்தனை நபர்கள் தோண்டி எடுத்தார்கள் என்றால் சுமார் 4 நபர்கள். நான் எங்கு செல்கிறேன் என்பது குறித்து எங்கள் அலுவலகத்தில் பதிவேட்டில் குறித்து வைத்து விட்டு செல்ல வேண்டும் என்றால் என்றாலும அவ்வாறு நான் அந்த பதிவேட்டில் பராமரிப்பேனா என்றால் இல்லை. தேசிய நெடுங்சாலையில் கிழக்கு புறமாக செல்லும் சாலை எங்கு செல்லும் சாலை என்றால் சென்னை செல்லும் சாலை என்று திசை தெரியாது. அந்த இரு சாலைக்கு மத்தியில் கீரின் சர்க்கிள் உள்ளது என்றால் சரிதான். அந்த பிரதான சாலைகள் இரு சாலைகள் மத்தியில் சர்வீஸ் சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வீஸ் ரோடிற்கு தெற்கு பக்கமாக நறுவி மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். கிரீன் சர்கிள் இருந்து நறுவி மருத்துவமனைக்கு போகும் வழியில் வடக்கு புறத்தில் தெற்கு பார்த்தவாறு கடைகள், பெரிய பெரிய ஓட்டல்கள், திருமண மண்டபம், கீரீன் சர்கிள் அருகில் பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கலெக்டர் ஆபிஸ், சத்துவாச்சாரி மக்கள் இந்த வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக பொது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த வழியாக இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் எப்போதும் போய் கொண்டே இருக்கும் என்றால் சரிதான். வடக்கு காவல் நிலையத்தில் தகவலின் பேரில் சம்பவம் இடம் சென்றேன் என்றால் அந்த நேரத்தில் நானும் என்னுடைய உதவியாளர் ஜீவரத்தினமும் கீரின் சர்க்கிள் அருகில் இருந்ததால் எதிரி இருக்கும்

இடம் சென்றோம். அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் காவல் அலுவலர்கள் இருந்தார்கள். காவல் நிலையத்தில் என்ன என்று தகவல் வந்தது என்றால் எதிரி கார் டெக்கார்ஸ் அருகில் எதிரி பரசுராமன் இருப்பதாக தகவல் வந்தது. எதிரி பரசுராமன் என்ன உடை உடுத்தி இருந்தார் என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. நான் செல்வதற்கு முன்பாகவே காவல் ஆய்வாளர் எதிரி பரசுராமனை பிடித்து வைத்து இருந்தார்களா என்றால் நான் செல்லும் நேரமும் எதிரியை காவல் துறை கைது செய்து நேரமும் ஒரே நேரமாக இருந்தது. எதிரி அந்த நேரத்தில் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் திசை ஞபாகம் இல்லை. காவல் துறையை பார்த்து விட்டு எதிரி பயந்து ஒடினாரா என்றால் எதிரியை கைது செய்யும் நேரத்தில் நான் சென்றேன் பயந்து ஒடினாரா என்று நான் பார்க்கவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் எதிரி பரசுராமன் கொடுக்கவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் எந்த சான்று பொருளும் கைபற்ற படவில்லை என்றாலும் சரியல்ல. நான் ஏற்கனவே பல நீதிமன்றங்களில் பொய் சாட்சியம் அளித்து பழக்கம் என்றாலும் என்னுடைய உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க இந்த வழக்கிலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY